# TAMIL FORUM FOR PEACE

**இ**னப்பிரச்சனை தீர்வு சம்பந்தமாக இலங்கை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் தயாரித்துள்ள அறிக்கைகள் அனைத்து கட்சி பிரதிநிதிகள் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட இருப்பதை தமிழ் சமாதான ஒன்றியம் வரவேற்கிறது. இதில் பெரும்பான்மை நிபுணர்கள் தயாரித்துள்ள அறிக்கை அதிகப்பட்ச அதிகார பகிர்வையும் அதிகார பரவலாக்கத்தையும் வலியுறுத்துகிற பல வரவேற்கத்தக்க அம்சங்களை கொண்டிருக்கின்றது என்பதும், புரையோடிப் போயுள்ள இலங்கை இனப் பிரச்சினைக்கு சமாதான மூலமான ஒரு தீர்வுக்கு அவாவுகின்ற சகலராலும் ஆதரிக்கப்பட வேண்டும் என்பதுமே தமிழ் சமாதான ஒன்றியத்தின் கருத்தாகும்

பல்லின மக்கள் வாழும் இலங்கை தீவில் சிறுபான்மை இன மக்களின் அரசியல் மொழி கலாச்சார உரிமைகள் உதாசீனம் செய்யப்பட்டு வந்த வரலாறே இன்றைய வன்முறை அரசியலுக்கு வழிசமைத்தது. இவ் அடிப்படை பிரச்சினைகளை இனங்கண்டு, அவற்றின் தீர்வுக்கான பல ஆக்கபூர்வமான ஆலோசனைகள் இவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன என தமிழ் சமாதான ஒன்றியம் கருதுகிறது.

இவ் அறிக்கையில் தமிழர் சிங்களவர் முஸ்லிம்கள் மற்றும் இலங்கையிலுள்ள அனைத்து இனங்களும் இலங்கையின் குடிமக்கள் என்பதும், அவர்களது அரசியல் குடி உரிமைகள் சமமாக பேணப்படவேண்டும் என்பதும் அடிப்படையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அதிகார பரவலாக்கம் சம்பந்தமான பல தீர்வுகள் முன்வைக்கப்பட்டுள்ளது. மையப்படுத்தப்பட்ட அதிகாரம் கொண்ட இலங்கை அரசியல் யாப்பு பல்லின மக்கள் வாழும் இலங்கைக்கு பொருத்தமற்றது என்பதும் இந்த அறிக்கையில் தெளிவாக முன்மொழியப்பட்டுள்ளது. இக் கருத்தாக்கங்களை தமிழ் சமாதான ஒன்றியம் வரவேற்கின்றது.

இலங்கையில் தொடர்ந்துவரும் இனப்போர் நாட்டின் அரசியல் பொருளாதார அடித்தளத்தை நெருக்குவாரத்திற்கு இட்டுச்சென்றது மட்டுமல்லாமல் மக்களின் வாழ்வுரிமை சிவில் உரிமை அனைத்தையும் பறித்தெடுத்தும் வருகிறது. இந் நிலையில் எந்தவித முடிவுமின்றி தொடரும் இந்த யுத்தத்திற்கு அடிப்படைக் காரணியாக அமைந்திருந்த இனப் பிரச்சினைக்கு சகலரும் ஏற்றுப் கொள்ளக்கூடிய ஒரு நியாயமான தீர்வு காணப்பட்டு இந்த யுத்தத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டியது இலங்கை மக்கள் அனைவரினதும் தலையாய கடமையாகும்.

இனப் பிரச்சினையின் தீர்வுக்கு இதுவரைகாலமும் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் எவையும் இரு தரப்புகளதும் தவறுகளால் நடைமுறைப் படுத்தப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது வரலாறு. இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டு இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கைகூட செயலற்று, இன்று முழு இலங்கை அடங்கலான இனப் போர் ஒன்றிற்கான முஸ்தீபுகள் ஆரம்பமாகியுள்ளன. இந் நிலைமை தொடருவதை எமது மக்கள் நலனில் அக்கறையுள்ள எவரும் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதே தமிழ் சமாதான ஒன்றியத்தின் கருத்தாகும்.

இருபது வருடங்களுக்கு மேலாக இலங்கை மக்களுக்கு மேல் திணிக்கப்பட்ட யுத்தத்தால் அழிவுகளே எஞ்சியுள்ளன. உயிர்களுக்கு எந்தவித உத்தரவாதமுமில்லாத பயங்கரமான ஒரு எதிர்காலத்தையே எமது மக்கள் எதிர் நோக்கியுள்ளனர். யுத்தத்தால் இலங்கை இனப் பிரச்சினையை தீர்க்கமுடியாது என்பது தெளிவாகத் தெரிந்துள்ள ஒரு நிலையில் சமாதான மூலமான - இலங்கையில் வாழும் சகல இன மக்களதும் அரசியல் ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்பட்ட அர்த்தமுள்ள ஒரு அரசியல் தீர்வுக்காக - அனைவரும் ஒன்றுபட வேண்டியது இன்று தவிர்க்க முடியாததாகியுள்ளது.

இதுவரை இல்லாத வகையில் சமாதானம் மூலமான ஒரு தீர்வுக்கு சாதகமான அம்சங்கள் இன்று அதிகரித்துள்ளன. சமாதான மூலமான ஒரு தீர்வுக்கு சர்வதேசிய ரீதியாக பெருகிவரும் ஆதரவுடன், வரலாற்றில் இல்லாத வகையில் இலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து செயற்பட இணங்கியுள்ளது இதற்கொரு நல்ல உதாரணம்.

இந்நிலையில் பெரும்பான்மை அறிக்கையின் சாராம்சத்தை குறுகிய அரசியல் லாபங்களுக்காக குறைக்காமல் அதனை மேலும் மெருகு படுத்தும் வகையான ஆரோக்கியமான விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டு ஐக்கிய இலங்கைக்குள் அதிகளவு அதிகார பகிர்வும் பரவலாக்கமும் கொண்ட அரசியல் யாப்பு மாற்றம் அவசியம்.

இரண்டு பெரும்பான்மை கட்சிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ள இச்சமயத்தில் பல்வேறு தடைகள் இருப்பினும் யாப்பு ரீதியான மாற்றத்தை பாராளுமன்றத்தில் மெரும்பான்மை பலத்தில் நிறைவேற்றுவது சாத்தியமே. இந்த அரசியல் மாற்றமே அனைத்து இனங்களுக்கும் நம்பிக்கையை ஊட்டி நாட்டின் ஒற்றுமைக்கும் சுபிட்சத்திற்கும் ஒரு படிக்கல்லாக அமையும் என தமிழ் சமாதான ஒன்றியம் கருதுகிறது.

எனவே மெரும்பான்மை அறிக்கையை தமிழ் சமாதான ஒன்றியம் கொள்கையளவில் வரவேற்பதோடு தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் உட்பட சகல இலங்கை அரசியல் கட்சிகளும், இலங்கையிலும், வெளிநாடுகளிலும் உள்ள சகல தமிழ், முஸ்லீம், சிங்கள ஸ்தாபனங்களும், இந்த அறிக்கையை மேலும் செழுமையூட்டும் ஆரோக்கியமான அழுத்தங்களை முன்வைக்குமாறு தமிழ் சமாதான ஒன்றியம் வேண்டுகிறது.

**23, டிசம்பர் 2006**

**27 Old Gloucester Street**
**LONDON WC1N 3XX**
peaceforum_sl@yahoo.co.uk
**தமிழ் சமாதான ஒன்றியம்**
**சமாதானம் சனநாயகம் சகவாழ்வு**